**தலைப்பு 257 - களுத்துறை மாவட்ட செயலகம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

களுத்துறை மாவட்ட செயலகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் களுத்துறை மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2022 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான களுத்துறை மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் பேரில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- கணக்காய்விற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

**1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் தெரிவிக்கப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

**1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று**

**(அ) முற்பணக் கொடுப்பனவுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகன்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) திறைசேரி SA-52 அட்டவணையின் பிரகாரம் முற்பண பீ கணக்கிற்கு மீளாய்வாண்டில் பணமாக செலுத்திய வரவு வைத்தல் மற்றும் செலவு வைத்தல் முறையே ரூபா 81,961,046 மற்றும் ரூபா 69,583,195 ஆக இருந்ததுடன் மாவட்ட செயலகத்தின் பரீட்சை மீதியின் பிரகாரம் வரவு மற்றும் செலவு மீதிகள் முறையே ரூபா 81,959,795 மற்றும் ரூபா 69,348,405 ஆக இருந்தமையால் வரவு மற்றும் செலவு மீதிகளில் முறையே ரூபா 1,200 மற்றும் ரூபா 234,790 ஆன இணக்கமின்மை காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது. | ஏனைய செலவின தலைப்பிலிருந்து மேற்கொள்ளப்பட்ட வரவு மற்றும் செலவு வைத்தல்களின் பிரகாரம் இந்த இணக்கமின்மை கள் இடம்பெற்றுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது | திறைசேரி பதிவுகளுடன் மீதிகள் ஒப்பிடப்பட்டு கணக்குகளை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) இங்கிரிய பிரதேச செயலகத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 215,400 ஆன கடன் மீதி, முற்பண பீ கணக்கின் இணக்கக்கூற்றில் பின்னிணைப்பு 3.2 இல் ஏனைய திணைக்களங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | தகவல் கோரலின் போது தவறுதலாக இது இடம்பெற்றுள்ளதாகவும் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது | சரியான அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கு உரிய தரப்பினர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2 நிதி நிலைமைக் கூற்று

**(அ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகன்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதி நிலைமைக் கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் மீதி ரூபா 3,197,710,978 ஆக இருந்த போதும் மாவட்ட செயலகத்தினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அத்திகதியில் மீதி ரூபா 2,822,609,574 ஆக இருந்தமையால் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் மீதியில் ரூபா 375,101,404 ஆன இணக்கமின்மை அவதானிக்கப்பட்டது. | தரவுகளை உள்ளடக்கும் போது இடம்பெற்றுள்ள தொழில்நுட்ப தவறொன்று காரணமாக இணக்கமின்மை ஏற்பட்டுள்ளதாகவும் நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | திறைசேரியுடன் ஒப்பிடப்பட்டு சரியான மீதிகளை நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மாவட்ட செயலகத்தின் புத்தகங்களில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் ஆரம்ப மீதிகளின் மொத்தம் ரூபா 2,6,583,165 ஆன பெறுமதி மீளாய்வாண்டின் போது உள்ளடக்கப்பட்டு சீராக்கம் செய்யப்பட்டிருந்த போதும் அதற்கான அட்டவணைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | இத்தகவல்கள் பிரதேச செயலகத்திடம் காணப்படுவதால் எதிர்காலத்தில் அவற்றை கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டிருந்தது | ஆரம்ப மீதிகளை சீராக்கம் செய்வதற்குரிய பதிவுகள் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டியதுடன் அட்டவணைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்காக சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாவட்ட செயலகத்தின் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் பரிசோதனையின் போது 4 பிரதேச செயலகங்களுக்குரிய கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாத மொத்தம் ரூபா 15,179,011 பெறுமதியான 47 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் காணப்பட்டன. அந்நிலுவை உறுதிச்சீட்டுக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 272 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் iv இல் காணாமல் | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாத இந்த உறுதிச்சீட்டுகளுக்கு இடையே ஒரு உறுதிச்சீட்டு தவிர எஞ்சிய உறுதிச்சீட்டுக்கள் தற்போது பிரதேச செயலகங்களில் உள்ளதாகவும் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பிரதேச செயலகங்களால் காணாமல் போன உறுதிச்சீட்டுக்கள் காணப்படுவதாக அறிவித்து | காணாமல் போன உறுதிச் சீட்டுக்களை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்க வேண்டியதுடன் நிதிப் பிரமாணம் 272 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் |

| | | |
|---|---|---|
| போன உறுதிச்சீட்டுக்கள் தொடர்பான கூற்றில் சமர்பிக்கப்படாத உறுதிச் சீட்டுக்கள் தொடர்பான தகவல்களை வெளிப்படுத்துவதற்கு கணக்கீட்டு உத்தியோகத்தர் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இருக்கவில்லையென அறிக்கையிடப்பட்டிருந்தது. | வேண்டும். |

**1.6.4 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

மாவட்ட செயலகத்தினால் கீழே காட்டப்பட்டுள்ள பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லையென்பது அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிதிப் பிரமாணம் 110 இன் பிரகாரம் சேதங்கள் தொடர்பான பதிவேடு நாளதுவரையாக பேணப்பட்டிருக்கவில்லை. | பதிவேட்டின் குறைபாடுகள் பூர்த்தி செய்யப்பட்டு சீராக்குவதற்கு ஆலோசணை வழங்கியுள்ளதாக | நிதிப் பிரமாணம் 110 இன் பிரகாரம் மற்றும் அதன் கீழே வரும் படிவத்தின் பிரகாரம் சேதங்கள் தொடர்பான பதிவேடு நாளது வரையாக்கப்பட வேண்டும். |
| (ஆ) நிதிப் பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்பு பதிவேடு நாளது வரையாக்கப் பட்டிருக்கவில்லை. | பதிவேட்டின் குறைபாடுகள் பூர்த்தி செய்து சீராக்குவதற்கு ஆலோசணை வழங்கியுள்ளதாக | நிதிப் பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்கள் நாளாந்தம் பரீட்சிக்கப் படக் கூடிய வகையில் பொறுப்புக்கள் பதிவேடொன்றில் அப்பொறுப்புக்கள் பதிவு செய்யப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 17 மூலதன மற்றும் மீண்டெழும் செலவின விடயங்களுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 1,404,394,700 ஆன தேறிய நிதி ஏற்பாடுகளில் ரூபா 1,126,961,678 மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்த துடன் சேமிப்புக்கள் ரூபா 277,433,022 ஆக இருந்ததுடன் அச்சேமிப்புக்கள் தேறிய நிதி ஏற்பாட்டிலிருந்து 6 சதவீதம் 96 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | கொரோனா தொற்று நிலைமையால் லெவினம் மட்டுப்படுத்தப்பட்டமை, கையிலுள்ள பட்டியல் காணப்பட்டமை, நிதிஏற்பாடு கையளிக்கப்பட்டுள்ளதாகவும் சிக்கனமாக செலவினம் மேற் கொள்ளப்பட்டமையாலும் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்தது. | சரியான மதிப்பீடு மற்றும் நிதி ஏற்பாடுகளை செயற்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கணக்காண்டில் குறித்த தரப்பினர்களுக்கு கொடுப்பனவு செய்யப்படாத கொடுக்கல் வாங்கல்கள் பொறுப்புக்களாக இனங்காணப்பட வேண்டிய போதிலும் தெரிவு கணக்காய்வு பரிசோதனையின் போது அந்நிபந்தனைகளை பூர்த்தி செய்யாத 18 செயற் திட்டங்களுக்குரிய ரூபா 44,546,313 ஆன பொறுப்புக்களாக இனங்காணப்பட்டிருந்தது. | பட்டியல்களை சமர்ப்பிப்பதில் தாமதத்தின் பேரில் கொடுப்பனவு உறுதிச்சீட்டு தயாரிப்பதில் தாமதம், ஒப்பந்த கொடுப்பனவு உறுதிச் சீட்டுகளின் கணக்கு செயற்பாடு மேற் கொள்ளப்பட்டமை மற்றும் குறைகளைப் பரீட்சிப்பதற்காக பொறியியல் பிரிவிற்கு வழங்கப்பட்டிருந்தமை மற்றும் உறுதிச்சீட்டுகளில் குறைபாடுகள் காணப்பட்டமை போன்ற காரணங்கள் குறிப்பிடப்பட்டிருந்தன. | பொறுப்புக்களை சரியாக இனங்கண்டு கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் செலவின விடயமொன்றுக்கு செலுத்த வேண்டிய பெறுமதி ரூபா 54,909,418 ஆக இருந்த போதும் அதற்காக 2022 ஆம் ஆண்டில் ரூபா 29,200,000 மாத்திரமே நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் போதியளவு நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. மேலும் செலவின விடயமொன்றுக்காக செலுத்த வேண்டிய ரூபா 30,475,499 ஆக இருந்ததுடன் அதற்காக 2022 ஆம் ஆண்டில் ரூபா 50,000,000 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதும் அது களுத்துறை பிரதேச செயலகத்தினை நிர்மாணிப்பதற்கு ஒதுக்கீடு செய்த தொகையாகும். அதன் பிரகாரம் பொறுப்புக்களைத் தீர்வு செய்வதற்கு நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | 2021 ஆம் ஆண்டில் கட்டுநிதி போதியளவில் கிடைக்காமை காரணமாக 2022 ஆம் ஆண்டில் கையில் பட்டியல் உருவாகியதாகவும் சில பட்டியல்களை தீர்வு செய்வதற்காக 2022 ஆம் ஆண்டில் நிதிஏற்பாடு போதியளவில் இல்லை என்பதை ஏற்றுக் கொள்வதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. | உரிய காலத்தில் பொருளாதார மற்றும் அரச நிதி நிலைமை தொடர்பாக கவனத்துடன் பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை ஏற்படுத்த வேண்டுமெனினும் அவ்வாறு செயற்படாத உத்தியோகத்தர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.3 கணக்கீட்டு உத்தியோகத்தர் வழங்க வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்தல் மேற்கொள்ள வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்கு ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையைத் தயாரித்துப் பேணப்படுவதை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப் படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் ஆக்கபூர்வ தன்மை தொடர்பாக அவ்வவ் போது மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை ஆக்க பூர்வமாக வைத்திருப்பதற்குத் தேவையான மாற்றங்களை மேற்கொள்ள வேண்டுடியிருந்த போதும், அம்மீளாய்வை எழுத்து மூலம் மேற்கொண்டமைக்கான கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதிக் கட்டுப்பாட்டு மற்றும் ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாடு முறைமை யொன்றினை பேணிச் செல்வதற்காக உள்ளக கட்டுப்பட்டு முறைமையை செயற்படுத்தியுள்ளதாகவும் எதிர்வரும் காலங்களில் மேம்படுத்த வேண்டிய முறைமையொன்றை இனங் கண்டு உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை புதிதாக அறிமுகப்படுத்துவதற்கு குறித்துக் கொண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் குறித்த மீளாய்வுகளை மேற்கொண்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கையிட வேண்டும். |
| (ஆ) | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தேவையான பிரகாரம் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியில் அனைத்து கணக்காய்வு விசாரணைகளுக்கு பதில் அளிக்கப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அறிக்கையின் 3.6 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வு விசாரணைகளுக்கு பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை. | பிரதேச செயலகங்களிலிருந்து தகவல்களை வழங்குவதில் தாமதத்தின் பேரில் விசாரணைகளுக்காக பதில் வழங்குவதில் தாமதமாகி உள்ளதாகவும் அதனை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வு விசாரணைகளுக்கு விரைவாக பதில் அளிக்கப்பட வேண்டும். |

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

-----------------------------------------------------------------------------------------------------------------------

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமைகள் கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | | |
| (அ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை | | | |
| i | xxiv ஆம் அத்தியாயத்தின் 4.4 ஆம் பிரிவு | 3 வருடங்களுக்கும் 4 இற்கும் முன்னர் மரணமடைந்த இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 355,133 கூட்டுத்தொகையான கடன் மீதியொன்று தாபன விதிக் கோவையின் பிரகாரம் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மரண பணிக்கொடை இதுவரை செலுத்தப்படாமை காரணமாக கடன் மீதியொன்று அறவிடப்படவில்லை எனவும் ஏனைய கடன் மீதி மாதாந்த தவணையாக அறவிடப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து கடன் மீதிகளை தீர்வு செய்ய வேண்டும் |
| ii | xxiv ஆம் அத்தியாயத்தின் 4.5 மற்றும் 4.6 | தீர்வு செய்யப்படாத வேலை இடை நிறுத்தப்பட்ட 2 உத்தியோகத்தர் களிடமிருந்தும் 3 மரணித்த உத்தியோகத்தர்களிடமிருந்தும் அறவிடப்பட வேண்டிய ரூபா 730,075 ஆன கடன் மீதியொன்று காணப்பட்டது. | இக் கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | - மேற்படி - |
| iii | xxiv ஆம் அத்தியாயத்தின் 4.5 மற்றும் 4.6 | பதவியை விட்டுச் சென்ற மூன்று உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 356,647 ஆன கடன் மீதிகள் மீளாய்வாண்டின் இறுதி வரை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | முறையாக கடன்களை பதிவழிப்பதற்கும் பிணையாளர் களிடமிருந்து அறவிடுவதற்கும் கடன்களை தீர்வு செய்யுமாறு கடிதங்கள் மூலம் அறிவித்தல் போன்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | சமூக சேவைகள், நலன்புரி மற்றும் கால்நடை வளர்ப்பு அபிவிருத்தி அமைச்சின் 2015 ஏப்ரல் 27 ஆந் திகதிய 01/03/2015/NSPD மற்றும் 2019 யூன் 24 ஆந் திகதிய 01/03/2015/NSPD (II) ஆம் இலக்க சுற்றறிக்கை | குறைந்த வருமானம் பெறும் வலது குறைந்த நபர்களுக்காக வாழ்வாதார படிகள் உரித்து வழங்கும் போதும் கொடுப்பனவு செய்யும் போது சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டது. | இது தொடர்பாக அறிவுறுத்தல் கடித மொன்று 2022 மார்ச் 28 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ளதாக | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அவ்வாறு செய்யாத உத்தியோகத்தர்கள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2001 திசெம்பர் 20 ஆந் திகதிய 13/2001 ஆம் திகதிய ஓய்வுதிய சுற்றறிக்கை | களுத்துறை மாவட்ட 12 பிரதேச செயலகங்களில் காணப்பட்ட 89 தற்காலிக ஓய்வுதிய கோவைகளில் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து தகவல்களையும் பெற்றுக்கொள்வதன் பேரில் இவ்வாறான கோழைவகள் காணப்படுவதாகவும் விசேட பரிசோதனையொன்றை மேற்கொள்வதற்கு கிராமசேவையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. | - மேற்படி - |
| (ஈ) | 2019 மே 31 ஆந் திகதிய 14/2019 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | 14 பிரதேச செயலகங்களில் 1362 ஓய்வுதிய கடித கோவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் ஓய்வூதியம் திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை. | சில கோவைகளில் காணப்படும் நிலைமையின் பேரில் திருத்தங்கள் மேற் கொள்ளப்படவில்லை. எனவும் ஓய்வூதிய கடித கோவைகளில் காணப்படும் குறைபாடுகளின் பேரில் திருத்தங்கள் செய்யப்படாத ஓய்வூதியக் கோவைகளை நாளதுவரையாக்க ஆலோசணை வழங்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (உ) | 1996 இன் 22 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தம் செய்யப்பட்ட 1916 இன் 33 ஆம் இலக்க (182 ஆம் அதிகாரத்தின் பேரில்) 2020 ஆகஸ்ட் 26 ஆந் திகதிய 06/2020 ஆம் இலக்க பாதுகாப்பு | | | |

அமைச்சின் சுற்றறிக்கை

| | | | | |
|---|---|---|---|---|
| i | சட்டத்தின் 5(1),22(1), 22(2)(எ), 23(1) மற்றும் 23(3) பிரிவு மற்றும் சுற்றறிக்கையின் 2.4 ஆம் பிரிவு | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் அனுமதிப்பத்திரங்களை புதுப்பிக்காமல் களுத்துறை மற்றும் மத்துகம பிரதேச செயலகங்கள் முறையே 23 மற்றும் 98 நபர்கள் தமது பொறுப்பில் சுடுகலன்களை வைத்திருந்தனர். அவற்றிற்கிடையே களுத்துறை பி.செ. 12 சுடுகலன்களை 17 ஆண்டுகளாகவும் மத்துகம பி.செ. 3 சுடுகலன்களை 05 ஆண்டுகளாகவும் அனுமதிப் பத்திரங்களை புதுப்பித்தமைக்கு சான்றுகள் காணப்படவில்லை. | இந்நடைமுறையை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அவ்வாறு செய்யாத உத்தியோகத்தர்கள் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| ii | சட்டத்தின் 22(2)(ஈ), மற்றும் சுற்றறிக்கையின் 6 ஆம் பந்தி | களுத்துறை பிரதேச செயலக பிரிவில் மரணித்த 3 நபர்களிடமிருந்து 3 சுடுகலன்களை மீளப்பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணப்படும் குறைபாடுகளை இனங்கண்டுள்ளதாகவும் எதிர்காலத்தில் குறைபாடுகளை தவிர்ப்பதற்கு உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - |

## 2.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு 7 செயற்திட்டங்களின் நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டு அளவீட்டுப் பத்திரங்கள் தயாரிக்கப்பட்டு கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் தயாரிக்கப்படாதிருந்ததுடன் ஒப்பந்தக் காரருக்குச் செலுத்த வேண்டிய அண்ணளவாகக் கணக்கிடப்பட்ட ரூபா 6,320,000 என மாவட்ட பொறியியலாளர் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பரிந்துரை வழங்கியிருந்தனர். மேலும் | நிர்மாணக் கைத்தொழிலில் காணப்பட்ட சிக்கல் காரணமாக உடன்படிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு இடையூறு காணப்பட்டமை பற்றுச் சீட்டுக்கள் சமர்ப்பிப்பதில் தாமதம் காரணமாக உறுதிச் சீட்டைத் தயாரிப்பது தாமதமாகியமை ஒப்பந்த கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்களை அளவீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளல் மற்றும் குறைபாடுகளைப் பரீட்சிப்பதற்காக | முறையற்ற கொடுக்கல் வாங்கல்களை அங்கீகரித்த பரிந்துரைத்த மற்றும் உறுதிப்படுத்திய உத்தியோகத்தர்கள் தொடர்பாக முறையான பரிசோதனை மேற்கொண்டு ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கும் அரச நிதி முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டிருந்தால் அவற்றை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இச்செயற்திட்டத்துக்குரிய செலுத்த வேண்டிய தொகை என ரூபா 12,900,466 என திறைசேரிக்கு அறிக்கையிடப்பட்டிருந்தது. | பொறியியல் பிரிவிற்கு வழங்குதல் மற்றும் உறுதிச் சீட்டுகளில் குறைபாடுகள் காணப்பட்டமை போன்ற காரணங்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. | |
| (ஆ) | மதுராவெல பிரதேச செயலகத்தின் புதிய கட்டிடத்தின் work station அமைத்தல் ஒப்பந்தத்தின் வேலைகள் ஆரம்பிக்கப் படாது இருக்கும் போதும் வாகன நிறுத்துமிட செயற்திட்டம் மற்றும் மோட்டார் வாகன போக்குவரத்து அலுவலகத்திற்காக மின்பிறப்பாக்கியொன்றை வழங்கிப் பொருத்தும் செயற்திட்டம் மாவட்ட செயலகத்தால் இரத்துச் செய்யப்பட்டிருந்த போதும் அச் செயற்திட்டங்களுக்காக செலுத்த வேண்டிய தொகைகளாக முறையே ரூபா 5,000,000 ரூபா 4,878,665 மற்றும் ரூபா 3,602,880 கையிலுள்ள பற்றுச்சீட்டு கொடுப்பனவு செய்ய இருப்பதாக திறைசேரிக்கு அறிக்கையிடப்பட்டிருந்தது. | மதுராவெல பிரதேச செயலகத்தின் புதிய கட்டிடத்தினை திறந்து வைத்தல் முன்னுரிமை யான செயற்பாடாக அறிவிக்கப்பட்டிருந்தது. ஏனைய 2 செயற்திட்டங்களை செயற்படுத்தல் இரத்துச் செய்யப்பட்டிருந்தன. | - மேற்படி - |
| (இ) | மாவட்ட செயலகத்தின் விராந்தைக்கு நிலக்கல் பிடிப்பதற்கு உரிய ஒப்பந்தக்காரருக்கு கொடுப்பனவு செய்வதற்கு ரூபா 4,810,840 ஆன கையிலுள்ள பற்றுச் சீட்டுக்கள் கொடுப்பனவு செய்வதற்கு இருப்பதாக திறைசேரிக்கு அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் 2022 மார்ச் 28 ஆந் திகதி வரை நிலக்கல் பிடித்தல் மேற்கொள்ளப் படாமை அவதானிக்கப்பட்டது. | உத்தியோகத்தர்களின் அதிக வேலைப்பழு காரணமாக தவறுதலாக கையிலுள்ள பற்றுச் சீட்டுக்கள் அறிக்கையில் இந்த உருப்படி உள்ளடக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - |

**2.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | களுத்துறை பிரதேச செயலகத்தில் மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது மீளாய்வாண்டில் கொடுப்பனவு ஆரம்பிக்கப்பட்டிருந்த ஒன்பது வலது குறைந்தோருக்கான நலன்களை பெறுவோருக்கான படிகள் கொடுப்பனவின் போது பணம் பெற்றுக் கொண்டதாக கையொப்பத்தைப் பெற்றுக் கொண்டு ரூபா. 320,000 ஆன கூட்டுத்தொகையொன்றை கொடுப்பனவு செய்யாமல் உத்தியோகத்தரால் அப்பணம் முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | இப்பண முறைகேடு தொடர்பாக ஆரம்ப புலனாய்வொன்றை மேற்கொள்வதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் அதனுடன் தொடர்புடைய உத்தியோகத்தருக்கு தற்போது இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. | உள்ளக கட்டுப்பாட்டினை பலப்படுத்த வேண்டுமெனவும் பணத்தை முறையற்ற வகையில் பயன்படுத்திய உத்தியோகத்தர்கள் தொடர்பாக தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மத்துகம பிரதேச செயலகத்தில் இடம்பெற்றிருந்த ரூபா 7,022,668 ஆன ஓய்வூதிய மோசடி வெளிப்படுத்தப்பட்டு மாவட்ட செயலகத்தினால் 2021 மே 1 ஆம் திகதி ஆரம்ப பரிசோதனை ஒன்று நடத்தப்பட்டிருந்த போதும் இவ் ஓய்வூதிய மோசடி தொடர்பாக தகவல்கள் மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஓய்வூதிய மோசடி தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துதல் ஓய்வூதிய திணைக்களத்தால் மேற்கொள்வதாக அறிக்கையிடப்பட்டிருந்தது. | - மேற்படி - |

**2.7 வைப்பு மீதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு 6 பொது வைப்புக் கணக்குகளில் ரூபா 467,133,878 தொகை மீதியொன்றாக இருந்ததுடன் அதில் ரூபா 166,946,673 தொகை 2 ஆண்டுகளும் ரூபா 17,891,238 தொகை 5 ஆண்டுகளை | போதியளவு கட்டுநிதி கிடைக்காமை, வெளிநிறுவனங்களிலிருந்து கிடைக்க வேண்டிய பரிந்துரைகள் தாமதமானமை மற்றும் | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| விஞ்சிய வைப்பு மீதிகளாக இருந்தன. இது தொடர்பாக நிதிப் பிரமாணம் 571(3) ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டங்களின் சரிசெய்யப்படாத தவறுகள் மற்றும் குறைபாடுகளை சீராக்குதல் தாமதம் போன்ற காரணங்களின் பேரில் வைப்புக் கணக்கிலிருந்து தீர்வு செய்தல் தாமதமகியுள்ளதாகவும் அது தொடர்பாக செயற்பட உத்தியோகத்தர்கள் தெரியப்படு:த்தியுள்ளதாகவும் அறிக்கையிடப்பட்டிருந்தது. | |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 தொலைநோக்கும் செயற்பணியும்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| செயற்திறனான வள முகாமைத்துவம் மூலம் செயற்திறனாக நிர்வாக கட்டமைப்பொன்றை உருவாக்கி மாவட்டத்தின் நிலைபேறான அபிவிருத்தியொன்றை ஏற்படுத்துதல் களுத்துறை மாவட்ட செயலகத்தின் செயற்பணியாக குறிப்பிடப்பட்டிருந்த போதும் 8 பிரதேச செயலக அதிகார பிரதேசங்களில் அரச மற்றும் பகுதியளவிலான அரச நிறுவனங்களுக்குரிய 45 கட்டிடங்கள் வருடக் கணக்காக மாவட்டத்தின் அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமல் பயன்பாடற்று காணப்பட்டன. அதில் 11 கட்டிடங்கள பயன்படுத்த முடியாத நிலைமையில் காணப்படுகின்றன. மேலும் 5 பிரதேச செயலகங்களில் குறித்த தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | காணப்படும் அதிக வேலைப் பழு மத்தியிலும் பிரதேச செயலாளர்களால் சொத்துக்களை பயன்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் பகுதியளவிலான அரச நிறுவனங்கள் இது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளின் அடிப்படையில் சொத்துக்கள் இதுவரை விளைவற்று காணப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | மாவட்டத்தின் வளங்களை அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக முழுமையாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.2 செயற்படுத்தப்படாத செயற்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் போது களுத்துறை மாவட்ட செயலகத்தின் கீழ் செயற்படுத்துவதற்கு அங்கீகரிக்கப்பட்டிருந்த மொத்தம் ரூபா 1,165,786,760 ஆன 1416 செயற்திட்டங்களில் 904 செயற்திட்டங்கள் மாத்திரம் செயற்படுத்தப்பட்டிருந்தன. அத்துடன் ரூபா 660,145,918 பெறுமதியான 511 செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கிராமிய வீதிகள் மற்றும் குறைந்த உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சின் செயற்திட்டங்களை செயற்படுத்துவதில் முறையற்ற வேலைத்திட்டங்கள், அபிவிருத்தி முன்மொழிவுகளை மாவட்ட செயலகத்தின் ஊடாக சமர்ப்பிக்காமை, 2021 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் அநேகமான செயற்திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டமை, நாடு முழுவதும் காணப்பட்ட மூலப்பொருள் விலை வேகமாக அதிகரித்தமை மற்றும் ஒப்பந்தக்காரர்களுக்கு கொடுப்பனவு தாமதத்தின் பேரில் அவர்கள் மந்தகெதியில் நிறைவேற்றல் போன்ற காரணங்கள் இதற்காக தாக்கமளித்திருந்ததாக அறிக்கை இடப்பட்டிருந்தது. . | குறித்த அமைச்சு மற்றும் நிர்வாக நிறுவனங்களுக்கு இடையே கலந்துரையாடி மாவட்டத்தின் அபிவிருத்தி தேவைப்பாடுகள் இனங்காணப்பட்டு செயற்திட்டங்கள் அங்கீகரிக்கப்படுதல் மற்றும் அவை முறையாக செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.3 உள்நாட்டு நிதியங்கள் ஈடுபடுத்தப்பட்ட செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) மதுகம பிரதேச செயலகத்தில் புதிய கட்டிடத்தின் இரண்டாவது மாடியை விரிவுாக்குவதற்கான ஒப்பந்தம் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது. | கட்டிடத்தின் எதிர்கால நிலைத்திரு தன்மை தொடர்பாக கவனத்திற் கொண்டு புதிய நிர்மாணப் பணிகளை விரைவாக ஆரம்பிக்கப்பட உள்ளதாகவும் மூலப்பொருட்களின் தட்டுப்பாடு விலை ஏற்ற இறக்கம் காரணமாக சிறிது காலதாமதம் | தெளிவற்ற விகிதங்கள் மற்றும் தவறான தகவல்களைக் கொண்ட ஆவணங்களின் பிரகாரம் கொடுப்பனவு செய்வதற்குரிய அங்கீகாரம் பரிந்துரை மற்றும் சான்றுறுதிப்படுத்த வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக தாபன |

ஏற்பட்டதாகவும் 2022 ஜூன் 2 ஆம் திகதி அளவில் நிர்மாணப் பணிகள் வெற்றிகரமாக முடிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது

விதிக் கோவைகளின் பிரகாரம் பரிசோதனை நடத்தப்பட்டு அதற்கேற்ப ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அத்துடன் மேலதிகமாகச் செலுத்தப்பட்ட பணம் அறவிடப்பட வேண்டும்.

i மதிப்பீடு செய்யும் போது முழுத்தொகை ரூபா. 960,520 தொகையான 03 வேலைகளுக்காக மாவட்ட பொறியியலாளர்கள் தயாரித்த விசேட விலை விகிதங்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் கட்டிட வேலைகளுக்கான வரையறை தெளிவின்றிக் காணப்பட்டமை.

ii ஒப்பந்தத்தின் படி இவ்வேலையை 35 நாட்களுக்குள் நிறைவு செய்ய வேண்டியிருப்பினும் அதற்கான work programme பெறப்படாது இருந்தமை ரூபா 350,400 தாமதக் கட்டணம் அறவிடப்பட வேண்டியிருந்தமை மற்றும் ரூபா 282,701 செயலாற்றல் பிணை பத்திரத்தின் காலம் நீடிக்கப்படாதிருந்தமை

iii. 2021 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு இவ் வேலைத் திட்டத்தின் மொத்த பௌதீக செயன்முன்னேற்றம் 50 சதவீதத்திற்கும் குறைவாகக் காணப்பட்டாலும் நூறு சதவீதமான வேலைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன என்பதைத் குறிப்பிட்டு ரூபா 6,716,962 ஆன உறுதிச் சீட்டுக்கள் தயாரிக்கப்பட்டு 2021 திசெம்பர் 31 ஆம் திகதி ரூபா 2,000,025 தொகை ஒப்பந்தக் காரருக்கு செலுத்தப் பட்டிருந்தது. எஞ்சிய ரூபா 4,716,937 தொகை செலுத்துவதற்கு உள்ள மற்றுமொரு உறுதிச்சீட்டு தயார்படுத்தப்பட்டு அது

| | | | |
|---|---|---|---|
| | செலுத்தப்பட வேண்டிய பட்டியலாக திறைசேரிக்கு அறிவிக்கப்பட்டிருந்தமை. | | |
| (ஆ) | 2021 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளைச் செயல்படுத்துவதற்கு இணையாக செழுமை உற்பத்திக் கிராமங்களை நிறுவுதல் மற்றும் அக் கிராமங்களில் பொது உட்கட்டமைப்பு அபிவிருத்தி ஆகியவற்றின் கீழ் மத்துகம பிரதேச செயலகத்தினால் நடைமுறைப் படுத்தப்பட்ட வேலைத்திட்டம் தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | இதற்கான பதில்கள் பிரதேச செயலகங்களில் இருந்து பெற வேண்டியிருப்பதால் பின்னர் பதில் சமர்ப்பிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்தது | செயற்திட்டங்களைச் செயல்படுத்துவது தொடர்பான வழிகாட்டல்களின் படி செயற்பட வேண்டும் என்றும் இத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் முறையாகச் செயற்படாத உத்தியோகத்தர்கள் மீது முறையான விசாரணை நடத்தி ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| i | செயற்திட்ட வழிகாட்டுதல் களின் படி பதிவு செய்யப்படாத சங்கத்திற்கு முறையன படிவத்தில் ஒப்பந்தம் செய்து கொள்ளாமல் ரூபா. 3,428,000 பெறுமதியான விவசாயக் கருவிகள் மற்றும் அவற்றை வழங்கும் போது தொடர்புபட்ட தொழில்நுட்ப நிறுவனங்களின் ஆலோசணை பெறப்பட்டிருக்க வில்லை. | | |
| ii. | கோரப்பட்ட விலை விபரங்களின் படி 20 பொலித்தீன் ரோல் தலா ரூபா 14,000 என்ற அடிப்படையில் கொள்வனவு செய்வதற்கு தொழில்நுட்பக் குழு பரிந்துரைத்திருந்த போதிலும், பிரதேச செயலாளரினால் 52 பொலித்தீன் ரோல்கள் கொள்வனவு செய்யப்பட்டு சங்கத்திற்கு வழங்கப் பட்டிருந்ததுடன் 2022 மார்ச் 16 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட வெளிக்கள கணக்காய்வு பரிசோதனையின் போது 22 பொலித்தீன் ரோல்கள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |

| | | | |
|---|---|---|---|
| (இ) | அகலவத்தை பிரதேச செயலகத்தினால் அறநெறிப் பாடசாலைகளுக்கான உபகரணங்களை வழங்குவதற்காக மேல் மாகாண கைத்தொழில் திணைக்களத்தின் பெயரில் ரூபா. 200,000 தொகையான காசோலையொன்று வழங்கப்பட்ட போதிலும் 2022 ஏப்ரல் 30 ஆம் திகதி வரை உரிய பொருட்கள் வழங்கல் இடம் பெற்றிருக்கவில்லை. காசோலையானது விடயத்திற்குப் பொறுப்பான அபிவிருத்தி உத்தியோகத்தர் பொறுப்பில் வைக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளாமல் உறுதிச்சீட்டுக்களை தயாரித்து காசோலை எழுதிக் கொடுத்த உத்தியோகத்தர்கள் மீது முறையான நடவடிக்கை எடுத்து எதிர்காலத்தில் இது போன்ற நிலைமையை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | சௌபாக்ய வேலைத்திட்டத்தின் கீழ் எலமுனதெனியவில் இருந்து புனித சாந்த பீட்டர் தோட்டம் வரையான வீதியை தாரிட்டு அபிவிருத்தி செய்யும் திட்டத்தில் ABC கற்கள் விநியோகித்தல் மற்றும் 37.5mm, 19mm, 12.5mm கற்களை விநியோகிக்கும் போது கூடிய விலையை பற்றுச்சீட்டினுள் உள்ளடக்கியதன் அடிப்படையில் ரூபா 487,500 தொகையும் அவற்றைத் தாக்கல் செய்யாது கோவைப்படுத்துவதற்காக ரூபா 71,409 தொகையும் முதற்தடவை தார் இடும் போது மணலுக்குப் பதிலாக சிப் கற்களைப் பயன்படுத்தியதால் ரூபா 58,623 தொகையும் அபிவிருத்தி செய்வதற்கு மதிப்பீடு செய்யப்பட்ட அளவை விட தார் ஊற்றியதாக ரூபா 192,239 தொகையும் மொத்தமாக ரூபா 809,771 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | - மேற்படி - | முறையான பரிசோதனையொன்றை நடாத்தி , மேலதிகமாக செலுத்திய தொகையை அரசிற்கு அறவிடப்பட வேண்டுமெனவும் அதனுடன் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர் களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | சமுர்த்தி பெறும் குடும்பங்களின் வலுவூட்டலுக்காக அமுல்படுத்தப்பட்ட சமுர்த்தி தோட்ட வேலைத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட 40 பயனாளிகளுக்கு 394 கோழிக் குஞ்சுகள் வழங்கும் திட்டத்திற்காக அகலவத்தைப் பிரதேச செயலகத்தினால் ரூபா 224,580 செலவிடப்பட்ட போதிலும் அதனைச் செயற்திறனாக செயற்படுத்துவதற்குத் தேவையான மருந்துகள், உணவு என்பவற்றை வழங்கும் | - மேற்படி - | முறையான பரிசோதனையொன்றை நடாத்தி காணப்படும் குறைபாடுகளை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முறைமைகள் தொடர்பில் கிராம மக்களுக்கு அறிமுகப்படுத்தும் நடைமுறைகள் தயாரிக்கப்படாமை மற்றும் குஞ்சுகளில் 9:1 என்ற விகிதத்தில் கோழிக் குஞ்சுகளின் எண்ணிக்கை இல்லாமை காரணமாக் எதிர்பார்த்த பெறுபேற்றைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலை உள்ளதாக அவதானிக்கப்பட்டது. | | |
| (ஊ) | அகலவத்த பிரதேச செயலகத்தினால் தெரிவுசெய்யப்பட்ட 73 சமுர்த்தி பயனாளி குடும்பங்களுக்கு ரூபா 3,008,250 செலவில் 143,250 தேயிலைச் செடிகளை 2021 ஆம் ஆண்டில் விநியோகிக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த போதிலும் 2022 மார்ச் 14 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கையின் படி தேயிலைச் செடிகள் மத்தியில் 80,980 தேயிலைச் செடிகள் பயிரிடப்படாததாலும் பயிரிடப்பட்ட 3,467 தேயிலைச் செடிகள் இறந்து விட்டதாலும் இத்திட்டத்தின் ஊடாக எதிர்பார்த்த பலன்கள் கிடைக்கப் பெறவில்லை என்பது தெளிவாகின்றது. | - மேற்படி - | முறையான விசாரணை ஒன்றை நடத்தி நடப்படாத தேயிலைச் செடிகளுக்கு ஏற்படும் செலவை பொறுப்பான தரப்பினரிடம் இருந்து அறவிட முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும் நடப்பட்ட தேயிலைச் செடிகளை முறையாகப் பராமரிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3.4 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தொடங்கொட பிரதேச செயலகம் 1989 ஆம் ஆண்டின் போது தீயிட்டுக் கொழுத்தியதால் ஏற்பட்ட ரூபா 1,465,525 ஆன நட்டம் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அறவிடுவதற்கு புத்தகங்களிலிருந்து அகற்றுவதற்கு 2021 திசெம்பர் 31 வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | குறித்த நட்டங்களையும் சேதங்களையும் புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு நி.பி 109 இன் பிரகாரம் விண்ணப்ப படிவம் அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து விரைவில் நட்டங்களையும் சேதங்களையும் தீர்வு செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது வலல்லாவிட்ட பிரதேச செயலகத்திற்குரிய வாகனமொன்று விபத்திற்கு உட்பட்டிருந்த போதும் அது தொடர்பான நட்டம் பற்றிய தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது நட்டத்தை மதிப்பீடு செய்து சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லையென்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் விரைவில் பரிசோதனை மேற்கொண்டு நட்டத்தை இனங் காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) மரணித்த ஓய்வூதியம் பெறுவோரின் தகவல்கள் நாளதுவரையாக்கப் படாமையால் களுத்துறை மாவட்டத்தின் 07 பிரதேச செயலகங்களின் இறந்த ஓய்வூதியம் பெறும் 25 பேருக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 764,551 ஆன மிகை அறவீடொன்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டுள்ள பணத்தை 2022 ஆம் ஆண்டின் போது அறவிடப்பட்டு வருவதாகவும் சில ஓய்வூதியம் பெறுவோரின் மொத்த பணமும் அறவிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | குறித்த கூடுதலான கொடுப்பனவை அறவிடுவதற்கும் எதிர்காலத்தில் அவ்வாறான நிலைமைகள் ஏற்படாதவாறு செயற்படவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென |

## 3.5 கணக்காய்வு விசாரணகளுக்கு பதில் வழங்காமை

.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்ட 24 கணக்காய்வு விசாரணைகளுக்காக 2022 மே 31 ஆந் திகதி வரை பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | பிரதேச செயலகங்களிலிருந்தும் ஏனைய நிறுவனங்களிலிருந்து பதில் கிடைத்த பின்னர் விரைவில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது | கணக்காய்வு விசாரணைகளுக்காக உரிய நேரத்தில் பதிலளித்து உரிய சரிப்படுத்தல் செய்யப்பட வேண்டும் |

## 3.6 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) களுத்துறை மாவட்டத்தில் இயற்கை அனர்த்தங்களினால் முற்றாக சேதமடைந்து அதிக ஆபத்தாக அடையாளம் காணப்பட்ட குடும்பங்களுக்கு ‘‘வீட்டுக்கு வீடு’’ என்ற தொனிப்பொருளின் கீழ் 918 வீடுகளை நிர்மாணிப்பதற்காக 2017 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை பெறப்பட்ட ரூபா.1,466,813,225 ஆன நிதி ஒதுக்கீட்டில் இருந்து 2021 திசெம்பர் 31 | ஆபத்தில் உள்ள வீடுகளை அகற்றுவதற்கு விருப்பமில்லாமல் இறுதி தவணையை பெற்றுக் கொள்ளாமை, தவணைப் பணத்தை பெற்ற பின் தொடர்புடைய நிர்மாணங்களை மேற்கொள்வதில் தாமதம், இயற்கை சீற்றங்கள் மற்றும் கொவிட் நிலைமைகள் காரணமாக நிர்மாணத்தில் | பணம் வழங்கப்பட்ட பயனாளிகளின் வீடுகளைக் கட்டி முடிக்கத் தேவையான பணிகளைச் செய்து தற்போதுள்ள சிக்கல்களுக்குத் தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | ஆம் திகதியில் உள்ளவாறு தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் பயனாளிகளுக்கு ரூபா 1,002,291,323 வழங்கியிருந்தது. 397 வீடுகளை பயனாளிகளைக் கொண்டு நிர்மாணிப்பதற்கு உத்தியோகத்தர்கள் தவறியிருந்தமை அவதானிக்கப்பட்டது. | பின்னடைவு ஏற்பட்டமை வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளுக்கு ஒப்பாக கட்டுநிதி பெற்றுக் கொள்வதில் பற்றாக்குறை போன்ற விடயங்கள் மற்றும் நடைமுறைச் சிக்கல்கள் போன்ற காரணங்களால் நிர்மாணப் பணிகள் தாமதமடைந்ததாகக் அறிக்கையிடப்பட்டிருந்தது. | |
| (ஆ) | துப்பாக்கி அனுமதிப்பத்திரங்களைப் புதுப்பித்தலின் போது தொடர்புடைய தரப்பினரிடம் துப்பாக்கிகள் தொடர்ந்தும் அவசியம் என்பதை உத்தியோகத்தர்கள் உறுதி செய்ததற்கான எந்த ஆதாரமும் இல்லை என்பதுடன் தகுதியற்ற நபர்களின் கைகளில் துப்பாக்கிகள் காணப்படுவதால் வனவிலங்குகள் மற்றும் பொதுமக்களின் உயிருக்குக் கடுமையான அச்சுறுத்தலை ஏற்படுத்தக் கூடும் என்பதால் துப்பாக்கிகளைப் பொறுப்பற்ற விடயங்களுக்கு பயன்படுத்துவதைத் தவிர்க்கவும் குறித்த காலப்பகுதிக்குள் துப்பாக்கி அனுமதிப் பத்திரத்தை புதுப்பிக்காத உரிமையாளர்கள் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுப்பது மாவட்ட செயலாளர் மற்றும் பிரதேச பொலிஸ் அத்தியட்சர்களின் பொறுப்பாக இருப்பினும் அந் நிறுவனங்களுக்கிடையில் முறையான ஒருங்கிணைப்பைப் பேணி அதேவேளை புதுப்பிக்கப்படாத 31 துப்பாக்கிகளுக்குப் போதிய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்பது களுத்துறை மற்றும் மத்துகம பிரதேச செயலகங்களில் நடத்தப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. | கோவிட் தொற்று நோய் காரணமாக அனுமதிப்பத்திர புதுப்பித்தலுக்கான கால அவகாசம் அவ்வப்போது நீடிக்கப்பட்டமை அனுமதிப் பத்திரம் பெற்றவர்களிடம் நிலுவைத் தொகையை அறவிடுமாறும் சட்ட விரோத துப்பாக்கிகளை சேகரிக்க பொலிசுக்கு தெரியப்படுத்தி உள்ளதாகவும் எதிர்காலத்தில் சம்பந்தப்பட்ட துறைகளுடன் உரிய ஒருங்கிணைப்புடன் செயல்படுவதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. | சம்பந்தப்பட்ட துறைகளுடன் தொடர்பு கொண்டு முறையான ஆய்வு ஒன்றை நடத்தி எதிர்காலங்களிலும் துப்பாக்கியின் தேவையை அறிந்து துப்பாக்கி அனுமதிப்பத்திரத்தை ப் புதுப்பிக்காதவர்களின் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும |
| (இ) | களுத்துறை மாவட்டத்தில் 14 பிரதேச செயலக அதிகார பிரதேசத்தில் 2021 ஜனவரி 01 ஆம் திகதி சட்டவிரோதமாக பிடிக்கப்பட்ட காணிகளின் எண்ணிக்கை 6,893 ஆகவும் மீளாய்வாண்டில் 262 காணி கச்சேரிகள் மேற்கொள்ளப்பட்டு 11 பிரதேச செயலகங்களினால் 1,738 காணிகள் மாத்திரமே சட்டபூர்வமாக் கப்பட்டிருந்தன. மில்லனிய ஹொரணை மற்றும் பாணந்துறை பிரதேச செயலகப் | பிரதேச அலுவலகங்களிலிருந்து பதில்கள் கிடைக்கப்பெற வேண்டியிருப்பதால் பின்னர் பதில் சமர்ப்பிக்கப்படும் என்று அறிக்கையிடப்பட்டிருந்தது. | அனுமதியற்ற காணிகளை முறைப்படுத்த விரைவில்நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பிரிவுகளில் 309 காணிகள் முறைப்படுத்தப்படுத்தல் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் காணிகள் எதுவும் முறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | 14 பிரதேச செயலகப் பிரிவுகளில் 5 பிரதேச செயலகப் பிரிவுகளில் உள்ள 34 ஓய்வூதியம் பெறுவோர்களுக்கு நிரந்தர அல்லது தற்காலிக ஓய்வூதியக் கடிதமின்றி ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருவதையும் மீளாய்வாண்டில் ரூபா 30,829,185 மாத்திரம் அவ்வாறு வழங்கப்பட்டிருந்தது. இதன்படி நிரந்தர அல்லது தற்காலிக ஓய்வூதிய ஆவணங்கள் இன்றி ஓய்வூதியம் வழங்குவதில் பிழைகள் மோசடிகள் அல்லது முறைகேடுகளைத் தடுப்பதற்காக பின்பற்ற வேண்டிய முறையான நடைமுறைகளை அறிமுகப்படுத்த முகாமையினால் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.. | நிரந்தரம் அல்லது தற்காலிக ஓய்வூதியக் கடிதங்களின்றி ஓய்வூதியம் வழங்குவதில் ஏற்படக்கூடிய பிழைகள் மோசடிகள் மற்றும் முறைகேடுகளைத் தடுப்பதற்காக 2017 ஆகஸ்ட் 03 ஆம் திகதி மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலகங்களுக்கும் அறிவுறுத்தல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | கோப்புகள் இன்றி ஓய்வூதியம் பெறுவோர் மீது விசாரணை நடத்தப்பட்டு ஓய்வூதிய உரிமைகள் ஏற்படுத்தப்பட்டு நிரந்தர அல்லது தற்காலிகக் கோப்புகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (உ) | களுத்துறை மாவட்டத்திலுள்ள 14 பிரதேச செயலகங்களில் 165 ஓய்வூதியக் கோப்புகளில் 2021 திசெம்பர் 31 ஆம் திகதியன்று மேலதிகமாகச் செலுத்தப்பட்ட ஓய்வூதியச் சம்பளத் தொகை ரூபா 13,294,964 ஆக இருந்ததுடன் அவை தவணை அடிப்படையில் அறவிடப்பட்டு வந்ததுடன் 06 பிரதேச செயலகங்களில் 15 ஓய்வூதியம் பெறுவோர்ர மரணத்தி காரணத்தினால் ரூபா 962,672 தொகையை அறவிடு முடியாமல் போயிருந்தது. | அறவிடப்படாமலட காணப்படும் பணத்தை அறவிடுவதற்காக மேற்கொள்ள இயலுமான மாற்று நடவடிக்கைகள் குறித்த ஆராய்ந்து பார்க்குமாறு பிரதேச செயலகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | மேலதிகமாகச் செலுத்திய தொகையை முறையாக அறவிடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். |
| (ஊ) | களுத்துறை பிரதேச சபைப் பிரிவில் உள்ள புலர்டன் கைத்தொழில் பேட்டை நீண்ட கால குத்தகை அடிப்படையில் காணி வழங்கப்பட்ட 20 நிறுவனங்களுக்கு மீளாய்வாண்டின் இறுதியில் குத்தகை அல்லது குத்தகை அனுமதிக் கடிதங்கள் வழங்கப்படவில்லை. குடிசன உத்தியோகத்தரால் காணியின் மொத்த மதிப்பீட்டின் அடிப்படையில் கணக்கிடப்பட்டதன் படி 20 குத்தகைகயாளர்களிடமிருந்து 2006–2022 வரையிலான காலப் பகுதியுடன் தொடர்புடைய ரூபா 48,283,020 குத்தகை பணத்தை அறவிடுவதற்கான இயலுமை உள்ளதாக அவதானிக்கப்பட்டது. 2021 ஒக்தோபர் 13 திகதிய 2021/06 ஆம் | அண்ணளவான மதிப்பீட்டின் அடிப்படையில் வரிகளை அறவிடுமாறு காணி ஆணையாளர் நாயகத்திடம் விசாரிப்பட்டுள்ளதாகவும் கிடைக்கப்பெறும் அறிவுறுத்தல்களுக்கு அமைய மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிக்கையிடப்பட்டுள்ளது. | காணிகளின் உடமையை கையளித்து நிலுவைக் குத்தகை வாடகையை உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இதுவரை உரிய நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இலக்க சுற்றறிக்கையின் மூலம் காணி ஆணையாளர் நாயகத்தினால் பிரதேச செயலாளர்களுக்கு ஆலோசணை வழங்கப்பட்டிருந்தது. எனினும் களுத்துறை பிரதேச செயலாளரால் காணியின் உடமையை கையளிக்கும் செயற்பாட்டை பூர்த்தி செய்யாமையால் மேற்படி குத்தகை வருமானம் அரசினால் இழக்கப்பட்டிருந்தது. மேலும் மத்துகம பல்லேகொடவத்த கைத்தொழில் வலயத்தில் 5 காணிகளிலிருந்தும் அகலவத்தைப் பிரதேச செயலகப்பிரிவில் உள்ள விவசாய மற்றும் கைத்தொழில் அடிப்படையில் நீண்ட கால குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்ட 5 காணிகளிலிருந்தும் குத்தகை அறவிடப்படுவதில்லை என்பதுடன் அக்காணிகளின் உடமையை கையேற்று அண்ணளவிலான குத்தகை தொகையை அறவிடுவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (எ) | களுத்துறை மற்றும் அகலவத்தை 02 பிரதேச செயலகப் பிரிவுகளில் 416 அனுமதியற்ற அரச காணித் துண்டுகள் இருந்த போதிலும் 39 அனுமதியற்ற குடியிருப்பாளர்களின் விபரங்கள் மாத்திரமே இருந்தன. 02 பிரதேச செயலகப் பிரிவுகளில் 124 வெற்றுக் காணிகள் உள்ள போதிலும் பிரதேச செயலகப் பிரிவுகளில் காணிப்பிரிவில் இனங்காணுதல் தொடர்பான தகவல்கள் அடங்கிய 114 வெற்றுக் காணிகள் மாத்திரமே உள்ளன | பதில் அளிக்கப்பட்டில்லை | பிரதேச செயலகங்களில் காணிப்பிரிவில் தேவையான விரிவான தகவல்கள் உரிய முறையில் பராமரிக்கப்பட வேண்டியதுடன் அத்துமீறிய குடியிருப்பாளர்கள் முறைப்படுத்தப்பட வேண்டும் அல்லது வேறு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஏ) | 2020 ஆம் ஆண்டு முதுல் ஆரம்பமாகிய கொரோனா தொற்று நிலைமை அதே காலகட்டத்தினுள் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நிலை, அரச வருமானங்களின் வீழ்ச்சி போன்ற காரணங்களால் அரச செலவினங்களை மேற்கொள்ளும் போது கணக்கீட்டு உத்தியோகத்தரால் வெளிப்படையாக நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலும் சிக்கனமாக, செயற்திறனாக மற்றும் ஆக்கபூர்வமாகவும் மேற்கொள்ள வேண்டும். ஆயினும் மீளாய்வாண்டில் மாவட்ட செயலகத்தினால் நிகழ்கால நிலைமை | நீண்ட காலமாக இருந்து வரும் இரண்டாவது மாடியில் இருந்து ஐந்தாம் மாடி வரை பழுதுபார்ப்புப் பணிகள் மேற் கொள்ளப்படாததால் கடிதங்கள் ஆவணங்களின் பாதுகாப்பு மற்றும் அலுவலகத்தைப் பொது மக்களுக்கு இதமான இடமாக மாற்றும் நோக்கிலும் இத்திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டதாகத் அறிவிக்கப்பட்டுள்ளது. | சிக்கனமற்ற செலவினங்களை அங்கீகரித்த பரிந்துரைத்த மற்றும் சான்றுறுதிப்படுத்திய உத்தியோகத்தர்கள் தொடர்பாக முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதையும் எதிர்காலத்தில் செலவினங்களை |

| | | |
|---|---|---|
| தொடர்பாக கவனம் செலுத்தாமல் அலுவலக வளாகத்தில் அத்தியவசியமற்ற பழுதுபார்ப்பு மற்றும் அலங்காரத்திற்காக ரூபா 17,611,828 செலவுகளை மேற்கொள்ள அல்லது கொடுப்பனவிற்காக பொறுப்புக்களை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது, கேட்போர் கூடத்தின் மேற்கூரையை பழுதுபார்ப்பதைத் தவிர மற்ற அனைத்துத் திட்டங்களும் செயல்படுத்தப்படவில்லை. ஆயினும் பொதுமக்களுக்குத் தடையின்றி சேவைகளை வழங்கும் இயலுமை இருப்பதாக அவதானிக்கப்பட்டது. | | மேற்கொள்ளும் போது சிக்கனமாகவும் செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் மேற்கொள்ளப்படும் என்பதையும் உறுதிப்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 4. பொது மக்களுக்கான சேவைகளை நிறைவேற்றுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரினால் வழங்கப்பட்ட கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாவட்ட செயலகத்தின் பிரதான உள்ளக கணக்காய்வாளரால் அமைச்சிற்கும் கணஷக்காய்விற்கும் சமர்ப்பித்த செயலாற்றல் இலக்கு புள்ளிவிபரங்கள் ஒன்றுக்கொன்று வேறுபடல், கிராம சேவையாளர் அலுவலகத்தைபரீட்சித்தல் போன்ற திட்டவட்டமான செயற்பாடுகள் குறிப்பிடப்படாத குறிகாட்டிகளை தெரிவுசெய்தல் மற்றும் பிரதேச செயலகத்தின் மேற்பார்வை கணக்காய்விற்கு வழங்கிய செயலாற்றல் குறிகாட்டி உள்ளக கணக்காய்வாளரால் வழங்கிய குறிகாட்டிகளுடன் இணங்காமை போன்ற விடயங்கள் காரணமாக செயலாற்றலின் உள்ளவாறான செயன்முன்னேற்றத்தை அளவிடுவதற்கு முடியாமல் இருந்தது. | பொது மக்களுக்கு சேவையாற்றும் உத்தியோகத்தரான கிராம சேவை உத்தியோகத்தரின் நடவடிக்கைகள் வருடாந்தம் மதிப்பீடு செய்தல் அத்தியவசிய விடயமொன்றாக இருப்பதால் அது இலக்கொன்றாக இனங்காணப்பட்டதாகவும் புள்ளிவிபர தரவுகளில் இணக்கமின்மை உத்தியோகத்தர்களின் தவறொன்றாக அறிவிக்கப்பட்டிருந்தது. | பொது மக்களுக்கு கூடுதலான சேவைகளை நிறைவேற்றக்கூடிய சரியான செயலாற்றல் குறிகாட்டிகள் இனங்காணப்பட வேண்டியதுடன் மேற்பார்வை உத்தியோகத்தர்கள் தெரியப்படுத்தப்பட்டு இலக்கினை அடைந்துகொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**5 மனித வள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 சனவரி 24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பின்னிணைப்பு 2 மாதிரியின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டிற்கான மாவட்ட செயலகத்திற்காக தயாரிக்கப்பட்ட மனிதவள திட்டம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் ஊழியர் பயிற்சி திட்டம் மற்றும் பதவியணிக்கான செயலாற்றல் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை | 2022 ஆம் ஆண்டிற்காக சரியான மனிதவள திட்டம் ஒன்று தயாரிப்பதாகவும் செயலாற்றல் உடன்படிக்கை கைச்சாத்திடவும் நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டிருந்தது. . | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (ஆ) | ஒன்றிணைந்த சேவையின் உத்தியோகத்தர்களுக்காக வருடாந்த இடமாற்றல் கொள்கையின் 2.2.2 இன் பிரகாரம் ஒரே சேவை நிலையத்தில் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் பூர்த்தி செய்திருந்த உத்தியோகத்தர்கள் இடமாற்றங்களுக்கு உட்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்த போதும் மாவட்ட செயலகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சேவைக்காலம் 05 ஆண்டுகளை மிகைத்த 27 உத்தியோகத்தர்கள் சேவை புரிவதாக அவதானிக்கப்பட்டது. | உள்ளக இடமாற்ற சபை மூலம் 2022 ஆம் ஆண்டின் போது 9 உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அறிக்கையிடப்பட்டிருந்தது. | இடமாற்ற கொள்கையின் பிரகாரம் இடமாற்றம் செய்யப்பட வேண்டும். |
| (இ) | அகலவத்த பிரதேச செயலகத்தின் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் பதவியணியில் 08 மிகை உத்தியோகத்தர்களும் 10 உத்தியோகத்தர்கள் பற்றாக்குறையாகவும் இருந்தமை அவதானிக்கப்பட்டது. | பதில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும். |